# DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge`s Sankarankovil )

MCOP.No.31/2015

******

| | |
|---|---|
| Deposition of Witness for | : RW1 |
| Name | : வெள்ளைச்சாமி |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 20.02.2020 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of.

**முதல் விசாரணை :**

சாட்சி இன்றைய தினம் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, முதல் விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டார்.

நான் சங்கரன்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தட்டச்சராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து எங்களுடைய வட்டார போக்குவரத்து அலுவலருக்கு வரப்பெற்ற அழைப்பாணையின் பேரில் வட்டார போக்குவரத்து அலுவலர் உத்தரவிற்கிணங்க நான் ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். எங்கள் அலுவலகத்திற்கு வரப்பெற்ற அழைப்பாணையில் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், உமையத்தலைவன்பட்டி அஞ்சல், ஏ.கரிசல்குளம் பஞ்சாயத்து, ஆலடிபட்டி கிராமம், கிழக்கு தெரு, கதவு எண்.5/3ல் வசிக்கும் சண்முகத்தேவர் மகன் செந்தூர்பாண்டியன் என்பவர் எங்கள் அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் பெற்றுள்ளாரா என்பது குறித்து சாட்சியம் அளிக்க கோரப் பட்டிருந்தது. தற்போது நடைமுறையில் சாரதி வெர்சன் 4 என்ற மென்பொருளின் அடிப்படையில் ஆவணங்கள் கணிணி மயமாக்கப்பட்டுள்ளதால் பெயர் மற்றும் முகவரியை வைத்து அந்த நபருக்கு எங்கள் அலுவலகத்தால் ஓட்டுனர் உரிமம் வழங்கப்பட்டுள்ளதா, இல்லையா என கண்டறிய இயலாது. ஓட்டுனர் உரிமத்தின்

எண் தரப்பட்டால் மட்டுமே அந்த நபருக்கு எங்கள் அலுவலகத்தால் ஓட்டுனர் உரிமம் வழங்கப்பட்டுள்ளதா, இல்லையா என பரிசோதிக்க இயலும். எனவே, அழைப்பாணையில் சொல்லப்பட்டுள்ள நபர் எங்கள் அலுவலகத்தில் ஓட்டுனர் உரிமம் பெற்றுள்ளாரா, இல்லையா என கண்டறிய இயலாது. இந்த விபரத்திற்கு என்னை சாட்சியம் அளிக்க வட்டார போக்குவரத்து அலுவலர் அதிகாரம் அளித்த விபரத்திற்கும் சான்று தாக்கல் செய்கிறேன். அது சா.சா.ஆ.1 ஆகும்.

கு.வி:

மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர் இல்லை. மனுதாரர் ஆஜர் இல்லை. குறுக்கு விசாரணை இல்லை என முடிக்கப்பட்டது.

ம.வி: இல்லை.